# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## M.C.O.P.58/2024

## CNR.No.TNCB19000

| **Deposition** | **:** | **PW.1** |
|---|---|---|
| Name | : | பிரதீஷ் |
| Father's / Husband Name | : | லேட். சந்திரசேகரன் |
| Village / முகவரி | : | குஞ்சப்பணை, ஜக்கனாரை |
| Taluk / தாலுக்கா | : | நீலகிரி மாவட்டம் |
| Age / வயது | : | 23 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 12th February 2026

**முதல் விசாரணை**

நான் நீலகிரி மாவட்டம் குஞ்சப்பணையில் வசிக்கிறேன் . நான் வழக்கின் 2 ம் மனுதாரர் ஆவேன். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன் . அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.**

| **வ. எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **ஆவணத்தின் தன்மை** | **ஆவண வரிசை** |
|---|---|---|---|---|
| 1 | | 1 ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | | எனது ஆதார் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | | 3 ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 09.10.2023 | சந்திரசேகரனின் இறப்பு சான்றிதழ் | நகல் | ம.சா.ஆ.4 |
| 5 | 16.11.2023 | சந்திரசேகரனின் வாரிசு சான்றிதழ் | பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | 19.09.2023 | புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.6 |
| 7 | 18.09.2023 | மேட்டுப்பாளையம் அரசு மருத்துவ மனையில் பதிவு செய்யப்பட் Accident Register | நகல் | ம.சா.ஆ.7 |
| 8 | 27.09.2023 | TN 39 AJ 9580 வாகனத்தின் AIR வாகன அறிக்கை | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.8 |
| 9 | 21.09.2023 | சந்திரசேகரனின் பிரேத பரிசோதனை அறிக்கை | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.9 |
| 10 | 19.09.2023 | பார்வை மகஜர் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.10 |
| 11 | | மாதிரி வரைபடம் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.11 |
| 12 | 06.01.2023 | 3 ம் எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனமான நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியின் காப்பீடு | நகல் | ம.சா.ஆ.12 |
| 13 | 27.09.2023 | TN 43 P 4073 வாகனத்தின் AIR வாகன அறிக்கை | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.13 |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது தகப்பனார் இறந்ததற்காக இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த மனுவில் நான் 2 ம் மனுதாரர் என்றால் சரிதான். முதல் மனுதாரர் எனது தாயார். 3 ம் மனுதாரர் எனது தங்கை. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து மேட்டுப்பாளையம் - கோத்தகிரி போகும் ரோட்டில் விபத்து நடந்தது. எல்லை கருப்பராயன் கோவில் அருகே நடந்தது. எனது

அப்பா இரு சக்கர வாகனத்தில் சென்றார். இரு சக்கர வாகனத்தை எனது அப்பாவின் நண்பர்ஓட்டி சென்றால். எனது அப்பா அந்த வாகனத்திற்கு பின்னால் உட்கார்ந்து சென்றார். மேட்டுப்பாளையத்தில் இருந்து கோத்தகிரி போகும்போது விபத்து ஏற்பட்டது.

எனது தகப்பனார் போன வாகனத்தின் ஓட்டுனர் பெயர் சௌந்திரராஜன் . சௌந்திரராஜன் ஓட்டிச்சென்ற வாகனம் அவர் வேலை செய்யும் நிறுவனத்தின் உரிமையாளர் பெயரில் உள்ளது . விபத்து ஏற்படுத்திய வாகனம் டாடா இன்டிகா வாகனம். அந்த வாகனம் மேலிருந்து எதிர்திசையில் வந்தது . எனது அப்பா போகும்போது வளைவு பெண்டிற்கு மேல் செல்லும்போது விபத்து ஏற்பட்டது . சௌந்திரராஜன் மலையின் மேலே போகும்போது தவறான வழியில் சென்றதினால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல . விபத்துக்கு முழுக்காரணம் சௌந்திரராஜனின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும்தான் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் மேலிருந்து மெதுவாகதான் கீழே இறங்கினார் என்றும் சௌந்திரராஜன்தான் தவறான வழியில் சென்று விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் சௌந்திரராஜனுக்கு லேசான காயமும் எனது அப்பாவிற்கு தலையில் பலத்த காயமும் ஏற்பட்டது. விபத்து நடந்த 2 நாட்கள் கழித்து எனது அப்பா கோயமுத்தூர் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார் , எனது தகப்பனார் இறக்கும்போது அவருக்கு வயது 47. ஆதார் கார்டில் எனது தகப்பனார் 63 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ம.சா. ஆ 9 இறப்பு சான்றிதழிலும் எனது அப்பாவிற்கு 63 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மனுவிற்காக அதிகப்படியான இழப்பீடு பெற வேண்டி 63 வயது என்று குறிப்பிடாமல் 47 வயது என்று குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல . விபத்து சமயத்தில் எனது அப்பா மேசன் வேலை செய்து வந்தார் . அவருக்கு மாத சம்பளம் கிடையாது. வேலை கிடைக்கும்போது போவார். நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால்

| |
|---|
| தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.